சுருக்கம்

மகளிர் திட்டம் – நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்புகளை அமைத்தல் – கருத்துரு –ஒப்புதலளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை

அரசாணை (நிலை) எண்.61

நாள் : 26.05.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசி – 12
படிக்கப்பட்டவை :

1. அரசாணை எண்.116, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (SW.3) துறை, நாள் 31.7.2002.
2. அரசாணை எண். 465, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 23.07.2009.
3. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம். நேர்முக கடித எண்.118/டி1/2010, நாள் 19.5.2010.

* * * * * *

ஆணை:

படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணையில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்பு அமைப்பது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து ஆணையிடப்பட்டது.

2. மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள், நகர்புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையில் 2010–11ஆம் ஆண்டில் குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவித்தார்கள்.

3. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் படிக்கப்பட்டவை மூன்றில் உள்ள நேர்முக கடிதத்தில் மேலே பத்தி 2ல் உள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்புகளை அமைப்பது தொடர்பான கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார். மேலும், அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களுடன் கலந்தாலோசித்து வரைமுறைகளில் அவ்வப்போது நடைமுறையின் தேவைக்கு ஏற்றவாறு உரிய மாற்றம் செய்ய அதிகாரம் வழங்குமாறும், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகளை அமைக்க தேவையான அரசாணை

வெளியிடும்படியும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் கருத்துருவினை அரசு மிகவும் கவனமுடன் பரிசீலித்து நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்புகள் கீழ்க் கண்டவாறு அமைக்க அரசு ஆணையிடுகிறது.

**நகர்புறங்களில் குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பு :**

நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்களை சுய உதவிக் குழு இயக்கத்திற்குள் கொண்டு வரும் விதமாக கடந்த நான்கு ஆண்டுகளில் நகர்ப்புறங்களில் அமைக்கப்படும் புதிய சுய உதவிக் குழுக்கள் குடிசைப் பகுதிகளில் மட்டும் அமைக்கப்படுகிறது எனவும், இதன் காரணமாக 31.03.2010 அன்றைய நிலையில் 38 ஆயிரத்திற்கும் மேலான சுய உதவிக் குழுக்கள் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் கடந்த நான்கு ஆண்டுகளில் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் 10 மாநகராட்சிகள், 148 நகராட்சிகள் மற்றும் 561 பேரூராட்சிகள் உள்ளதாகவும், இவற்றில் 3,578 அறிவிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளும், 4,022 அறிவிக்கப்படாத குடிசைப் பகுதிகளும் உள்ளதாகவும், அரசாணை எண்.116, ச.ந (ம) ச.தி. துறை, நாள் 31.7.2002–ல் நகர்ப்புறங்களில் வார்டு அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் பகுதி வளர்ச்சி சங்கங்களை அமைக்க இடப்பட்ட உத்தரவு இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும், நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கும் ஏழை மகளிரை சுய உதவிக் குழு இயக்கத்தில் அதிகம் இணைத்து செயல்படும் வகையில் நகர்ப்புற குடிசைப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகளை உருவாக்கலாம்.

**(1)குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பின் வடிவமைப்பு:**

நகர்ப்புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு, பகுதி அளவிலும், குடிசைப்பகுதி அளவிலும் என இரண்டு நிலைகளில் அமையும்.

**அ)பகுதி அளவிலான மன்றம் :**

- மாநகராட்சிப் பகுதிகளில் குறைந்தபட்சம் பத்து தரமதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களைக் கொண்ட தெரு, சந்து, பகுதி அல்லது வீடுகளின் தொகுப்பு ஒவ்வொன்றிலும், தரமதிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒரு பிரதிநிதியினைக் கொண்டு பகுதி அளவிலான மன்றம் அமைக்கப்படும்.

- நகராட்சிப் பகுதிகளில் குறைந்தபட்சம் ஐந்து தரமதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களைக் கொண்ட தெரு, சந்து, பகுதி அல்லது வீடுகளின் தொகுப்பு ஒவ்வொன்றிலும், தரமதிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒரு பிரதிநிதியினைக் கொண்டு பகுதி அளவிலான மன்றம் அமைக்கப்படும்.

**ஆ) குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பு :**

- மாநகராட்சிப் பகுதிகளில் சராசரி 1000 நகர்ப்புற குடிசை வீடுகளுக்கு ஒரு குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பு ஏற்படுத்தப்படும். இவ்வாறு அமைக்கப்பட்ட

கூட்டமைப்பு பகுதியில் இருபது குழுவிற்கு குறைவாக இருப்பின் அங்கு கூட்டமைப்பு உருவாக்கப்படமாட்டாது. மேலும், அக்குழுக்கள் அவர்களது விருப்பத்திற்கேற்ப அருகில் உள்ள குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பில் தங்களை இணைத்துக் கொள்ளலாம்.

- நகராட்சிப் பகுதிகளில் சராசரி 500 நகர்ப்புற குடிசை வீடுகளுக்கு ஒரு குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பு ஏற்படுத்தப்படும். இவ்வாறு அமைக்கப்பட்ட கூட்டமைப்பு பகுதியில் பத்து குழுக்களுக்கு குறைவாக இருப்பின் அங்கு கூட்டமைப்பு உருவாக்கப்படமாட்டாது. மேலும், அக்குழுக்கள் அவர்களது விருப்பத்திற்கேற்ப அருகில் உள்ள குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பில் தங்களை இணைத்துக் கொள்ளலாம்.

நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புகளை ஏற்படுத்தும் போது, குடிசைப் பகுதிகளுக்கு இடையிலான தூரத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் மேலும், தனித்து உள்ள குடிசைப் பகுதிகளில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கைக்கும் குறைவான வீடுகள் இருப்பின் அதற்கேற்ப முடிவெடுத்துக் கொள்ளலாம்.

பேரூராட்சிப் பகுதிகளில் சுய உதவிக் குழுக்களுக்கான கூட்டமைப்புகளை அரசு ஆணை நிலை எண்.125 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (CGS-3) துறை, நாள் 21.07.2008 மற்றும் அரசு ஆணை நிலை எண்.135, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(CGS-3)துறை, நாள் 14.08.2008–ல் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படியே ஏற்படுத்தலாம்.

**இ) பொதுக்குழு மற்றும் செயற்குழு :**

- குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு ஒரு செயற்குழு மற்றும் ஒரு பொதுக் குழு இருக்கும்.
    - கூட்டமைப்பில் இணைந்துள்ள அனைத்து உறுப்பினர் குழுக்களும் பொதுக் குழு உறுப்பினர்களாக இருப்பர்.
    - பகுதி அளவிலான மன்றத்தின் பிரதிநிதிகளைக் கொண்டு குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு அமைக்கப்படும்.
- பகுதி அளவிலான மன்றம் மற்றும் குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் முறையாக செயல்பட நிர்வாகிகள் தேர்வு செய்யப்படுவர்.

**(2) குடிசைப் பகுதி அளவிலான குழு கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கான தகுதிகள்:**

நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் உள்ள ஆறு மாதம் நிறைவுற்று முதல் தரமதிப்பீட்டில் தேர்ச்சிப் பெற்ற குழுக்கள் மட்டுமே பகுதி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக முடியும். விதிமுறைகளின்படி இப்பகுதியில் செயல்படும் அனைத்து வகை சுய உதவி குழுக்களும் (இளைஞர் குழு நீங்கலாக) அவற்றை உருவாக்கியவர் யாராக இருப்பினும் குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராகலாம்.

**(3) பகுதி அளவிலான மன்றம் :**

கூட்டமைப்பின் செயல்பாட்டில் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பங்கேற்பினை அதிகரிக்கும் வகையில் தெரு, சந்து, பகுதி அல்லது வீடுகளின் தொகுப்பு அளவில் பகுதி அளவிலான மன்றம் அமைக்கப்படும். இம்மன்றம், குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படும். அதிக அளவில், சுய உதவிக் குழுக்கள் ஆர்வத்துடன் கூட்டமைப்பில் பங்கேற்க இது தளமாக அமையும் .

**3.1 பகுதி அளவிலான மன்றம் அமைப்பதற்கான நெறிமுறைகள் :**

**அ) மாநகராட்சிப் பகுதி :**

- பத்து முதல் இருபது வரை தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற சுய உதவிக் குழுக்களைக் கொண்ட தெரு, சந்து, பகுதி அல்லது வீடுகளின் தொகுப்பிற்கு ஒரு பகுதி அளவிலான மன்றம்

- இருபதிற்கு மேல் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற சுய உதவிக் குழுக்களைக் கொண்ட தெரு, சந்து, பகுதி அல்லது வீடுகளின் தொகுப்பிற்கு ஒவ்வொரு இருபது குழுவிற்கும் ஒரு பகுதி அளவிலான மன்றம்

- பத்திற்கும் கீழ் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற சுய உதவிக் குழுக்களைக் கொண்ட தெரு, சந்து, பகுதி அல்லது வீடுகளின் தொகுப்பிற்கு பகுதி அளவிலான மன்றம் கிடையாது. அக்குழுக்கள் அவர்களது விருப்பத்திற்கேற்ப அருகில் உள்ள பகுதி அளவிலான மன்றத்தில் தங்களை இணைத்துக் கொள்ளலாம்.

**மாநகராட்சிகளில் பகுதி அளவிலான மன்றம் அமைப்பதற்கான நெறிமுறைகள்:**

| தெரு, சந்து, பகுதி அல்லது வீடுகளின் தொகுப்பில் உள்ள தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற குழுக்களின் எண்ணிக்கை | பகுதி அளவிலான மன்றங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பத்திற்கும் கீழ் | கூட்டமைப்பு இல்லை |
| பத்து முதல் இருபது வரை | ஒரு பகுதி அளவிலான மன்றம். |
| இருபத்தி ஒன்று மற்றும் அதற்கு மேல் | இருபது குழுக்களுக்கு ஒரு பகுதி அளவிலான மன்றம், ஒவ்வொரு 20 குழுக்களுக்கும் ஒரு கூடுதல் மன்றம். |

**ஆ) நகராட்சிப் பகுதி:**

- ஐந்து முதல் இருபது வரை தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற சுய உதவிக் குழுக்களைக் கொண்ட தெரு, சந்து, பகுதி அல்லது வீடுகளின் தொகுப்பிற்கு ஒரு பகுதி அளவிலான மன்றம்

- இருபதிற்கு மேல் தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற சுய உதவிக் குழுக்களைக் கொண்ட தெரு, சந்து, பகுதி அல்லது வீடுகளின் தொகுப்பிற்கு ஒவ்வொரு இருபது குழுவிற்கும் ஒரு பகுதி அளவிலான மன்றம்

- ஐந்திற்கும் கீழ் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற சுய உதவிக் குழுக்களைக் கொண்ட தெரு, சந்து, பகுதி அல்லது வீடுகளின் தொகுப்பிற்கு பகுதி அளவிலான மன்றம் கிடையாது. அக்குழுக்கள் அவர்களது விருப்பத்திற்கேற்ப அருகில் உள்ள பகுதி அளவிலான மன்றத்தில் தங்களை இணைத்துக் கொள்ளலாம்.

**நகராட்சிகளில் பகுதி அளவிலான மன்றம் அமைப்பதற்கான நெறிமுறைகள்:**

| தெரு, சந்து, பகுதி அல்லது வீடுகளின் தொகுப்பில் உள்ள தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற குழுக்களின் எண்ணிக்கை | பகுதி அளவிலான மன்றங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஐந்திற்கும் கீழ் | கூட்டமைப்பு இல்லை |
| ஐந்து முதல் இருபது வரை | ஒரு பகுதி அளவிலான மன்றம். |
| இருபத்தி ஒன்று – மற்றும் அதற்கு மேல் | இருபது குழுக்களுக்கு ஒரு பகுதி அளவிலான மன்றம் ஒவ்வொரு 20 குழுக்களுக்கும் ஒரு கூடுதல் மன்றம். |

## 3.2 பகுதி அளவிலான மன்ற உறுப்பினர்கள்:

- இப்பகுதியில் கூட்டமைப்பில் இணைந்துள்ள முதலாவது தர மதிப்பீட்டில் தேர்வு பெற்ற ஒவ்வொரு குழுவிலிருந்தும் தலா ஒரு பிரதிநிதியைக் கொண்டு பகுதி அளவிலான கூட்டமைப்பு அமைக்கப்படும்.

- இக்கூட்டமைப்பு உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டாண்டுகள் ஆகும்.

- இவ்வுறுப்பினர்களில் குறைந்தபட்சம் 50 விழுக்காடு ஏழை மக்களாக இருக்க வேண்டும். வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளோர் பட்டியலில் உள்ள குடும்ப உறுப்பினர்களே ஏழை மக்களாவர்.

## 3.3 பகுதி அளவிலான மன்ற நிர்வாகிகள்:

- ஒவ்வொரு பகுதி அளவிலான மன்றத்திற்கும் தலைவர், செயலாளர் என இரண்டு நிர்வாகிகள் இருப்பர். இதில் ஒருவர் ஏழை மக்கள் பட்டியலில் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

- இவர்களின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். ஒரே நபர் இருமுறைக்குமேல் நிர்வாக பொறுப்பிற்கு வர இயலாது.

- கூட்டமைப்பில் உள்ள அனைத்து குழுக்களின் பிரதிநிதிகளும் நிர்வாக பொறுப்பேற்கும் வகையில் இரண்டாண்டுக்கு ஒரு முறை நிர்வாகிகளுக்குள் சுழற்சி முறை பின்பற்றப்பட வேண்டும். இச்சுழற்சி முறையினால், அனைத்துக் குழுக்களும், **பகுதி அளவிலான மன்ற**த்தின் நிர்வாக பொறுப்பேற்கும் வாய்ப்பினை பெறும்.

### 3.4 பகுதி அளவிலான மன்றக் கூட்டங்கள்:

- பகுதி அளவிலான மன்றக் கூட்டம் குறைந்தபட்சம் மாதம் ஒருமுறை நடத்தப்படும்.
- இக்கூட்டத்தின் குறைவெண் வரம்பு 50 விழுக்காடு ஆகும்.

### 3.5 பகுதி அளவிலான மன்றத்தின் பணிகள்:

- குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழுவிற்கும், குழு உறுப்பினர்களுக்கும் இடையே பாலமாக செயல்பட்டு செயற்குழுவின் முடிவுகளை குழுக்களுக்கு தெரிவிப்பது.
- குழுக்களுக்கு தேவைப்படும் திறன் பயிற்சிகளைக் கண்டறிந்து குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பிடம் இதற்கான கோரிக்கையை சமர்ப்பித்தல்.
- குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புக்கு காலமுறை முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பித்தல்,
- குடியிருப்பிற்கான நுண்கடன் திட்டங்களை தயாரித்தல், குழுக்கள் கடன் திரும்ப செலுத்துவதை கண்காணித்தல் போன்ற பிற பணிகள்.

## 4. குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பு:

### 4.1 பொதுக் குழு:

குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள அக்கூட்டமைப்பின் வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் செயல்படும் அனைத்து சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களும் கூட்டமைப்பின் பொதுக்குழுவின் உறுப்பினர்களாவர்.

### அ) பொதுக்குழுக் கூட்டங்கள்:

- பொதுக்குழுக் கூட்டமானது வருடத்திற்கு இரண்டு முறை நடைபெறும் (26 ஜனவரி மற்றும் 15 ஆகஸ்ட்).
- கூட்டமைப்பில் பதிவு செய்த குழுக்களில் 50 விழுக்காடும், குழு உறுப்பினர்களில் 20 விழுக்காடு வருகையும் கூட்டத்தின் குறைவெண் வரம்பாகும்.

- கூட்டமைப்பின் தலைவர் பொதுக்குழு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்துவார். அவர் கலந்து கொள்ளாத நிலையில், வருகை புரிந்துள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களில் ஒருவரை தேர்வு செய்து பொதுக்குழு கூட்டத்தை நடத்தலாம்.

**4.2 குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு:**

- குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழுவில் குறைந்தபட்சம் 11 உறுப்பினர்கள் இருப்பர்.

- இவர்களில் 10 உறுப்பினர்கள் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களாகவும், ஒருவர் மாற்றுத் திறனாளி சுய உதவிக் குழு உறுப்பினராகவும் இருக்க வேண்டும்.

- குறைந்தபட்சம் 50% செயற்குழு உறுப்பினர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை மக்களாக இருக்க வேண்டும்.

**அ) குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை விபரம் :**

ஒவ்வொரு பகுதி அளவிலான மன்றத்தின் சார்பாக கீழ்க்கண்டவாறு பிரதிநிதிகள் செயற்குழுவிற்கு தேர்வு செய்யப்படுவார்கள்.

**மாநகராட்சிப் பகுதிகளில்:-**

| பகுதி அளவிலான மன்றத்தில் உள்ள குழுக்களின் எண்ணிக்கை | பிரதிநிதிகள் எண்ணிக்கை |
|---|---|
| 10 – 14 சுய உதவிக் குழுக்கள் | இரண்டு பிரதிநிதிகள் |
| 15 – 20 சுய உதவிக் குழுக்கள் | மூன்று பிரதிநிதிகள் |

**நகராட்சிப் பகுதிகளில்:-**

| ஊராட்சியில் உள்ள குழுக்களின் எண்ணிக்கை | பிரதிநிதிகள் எண்ணிக்கை |
|---|---|
| 5 – 10 சுய உதவிக் குழுக்கள் | இரண்டு பிரதிநிதிகள் |
| 11– 20 சுய உதவிக் குழுக்கள் | மூன்று பிரதிநிதிகள் |

**ஆ) குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு அமைக்கும் முறை:**

- பகுதி அளவிலான மன்றத்தில் உள்ள அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களும் சேர்ந்து தங்கள் மன்றத்தின் சார்பாக குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களை தேர்வு செய்வர். பகுதி அளவிலான மன்றம் தேர்வு செய்யும் பிரதிநிதிகளில் குறைந்தபட்சம் 50 விழுக்காடு செயற்குழு உறுப்பினர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை பிரிவினராக இருக்க வேண்டும்

- பகுதி அளவிலான மன்றம் இல்லாத கூட்டமைப்புகளில் பொதுக்குழுவே, செயற்குழு உறுப்பினர்களை நேரடியாகத் தேர்வு செய்யும். பகுதி அளவிலான மன்றம் தேர்வு செய்யும் பிரதிநிதிகளில் குறைந்தபட்சம் 50 விழுக்காடு செயற்குழு உறுப்பினர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை பிரிவினராக இருக்க வேண்டும்.

- குறைந்தபட்சம் 50 விழுக்காடு செயற்குழு உறுப்பினர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழை பிரிவினராக இருக்க வேண்டும்.

- குறைவான பகுதி அளவிலான மன்றம் மற்றும் குழுக்களை உடைய கூட்டமைப்பில் பகுதி அளவிலான மன்றங்கள் சார்பாக தேர்வு செய்யப்பட்ட செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 11க்கும் குறைவாக இருக்கும்போது, பொதுக் குழுவானது தேவையான கூடுதல் உறுப்பினர்களை பொதுக்குழு கூட்டத்தில் தேர்வு செய்து நியமிக்கும்.

- செயற்குழு உறுப்பினர் பதவிக்காலம் 2 ஆண்டுகள் ஆகும். ஓய்வு பெறும் உறுப்பினர்களும் மீண்டும் போட்டியிட தகுதியுடையவர்களாவர்.

**4.3நிர்வாகிகள்:**

- குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு நான்கு நிர்வாகிகள், அதாவது தலைவர், செயலாளர், துணை செயலாளர் மற்றும் பொருளாளர் இருப்பர்.

- செயற்குழு உறுப்பினர்களிலிருந்து கூட்டமைப்பின் பொதுக்குழு கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

    - இதில் குறைந்தது இரண்டு நிர்வாகிகள் ஏழை மக்கள் பட்டியலில் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
    - செயலாளர் அல்லது பொருளாளர் ஆகியோரில் ஒருவர் ஏழை மக்கள் பட்டியலில் உள்ளவராக இருக்க வேண்டும்.

- கூட்டமைப்பு நிர்வாகிகளின் பதவிக்காலம் 2 வருடங்கள் ஆகும். ஒரே நபர் நிர்வாக பொறுப்பில் இரண்டு முறைக்கு மேல் இருக்கக் கூடாது.

- ஓய்வு பெறும் நிர்வாகிகளில் 2 நபர்கள் மட்டுமே மீண்டும் நிர்வாகிகளாக தேர்வு செய்யப்படலாம்.

- வரையறுக்கப்பட்ட குடிசைப்பகுதியில் உள்ள அனைத்து பகுதிகளும் வாய்ப்பு பெறும் வகையில் கூட்டமைப்பின் நிர்வாகிகள் இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் மாற்றப்படுவர்.

- சுய உதவிக் குழு தவிர, ஒரு நபர் இரண்டுக்கு மேற்பட்ட அமைப்புகளில் நிர்வாகியாக இருக்கக் கூடாது.

**4.4 குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பு செயற்குழுக் கூட்டம்:**

- குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு குறைந்தபட்சம் மாதம் ஒருமுறை கூட்டப்பட வேண்டும்.

- இதில் 50 விழுக்காடு குறைவெண் வரம்பு அவசியமாகும்.

**5. கடமைகள் மற்றும் பொறுப்புகள்:**

**5.1 குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பு:**

- தகுதியுடைய அனைத்து மகளிரையும் சுய உதவிக் குழுக்களில் இணைத்தல்

- சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்தி அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துதல்

- சுய உதவிக் குழுக்களிடையே தகவல் பரிமாற்றம் செய்தல்

- திறன் வளர்ச்சிக்கானத்  திட்டங்களை தயார் செய்தல்

- குழுக்களை தர மதிப்பீட்டிற்கு தயார் செய்தல் மற்றும் உரிய காலத்தில் கடன் மதிப்பீடு செய்து கடன் பெற்றுத் தருதல்

- பெருங்கடன் பெற்று உறுப்பினர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குதல்

- சுய உதவிக் குழுக்களின் கணக்குகளை பராமரிக்கவும் அவற்றை தணிக்கை செய்யவும் உதவுதல்

- வருமானம் தரத்தக்க செயல்பாடுகளில் குழுக்களுக்கு உதவி செய்தல். மேலும் தனி சுய உதவிக் குழுக்களால் மேற்கொள்ள இயலாத செயல்பாடுகளை சுய உதவிக் குழுக்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் மேற்கொள்ளுதல்.

- குழுக்களிடையேயான பிரச்சனைகளை சுமூகமாகத் தீர்த்து வைத்தல்

- அரசு நிறுவனங்கள் மற்றும் காப்பீட்டுக் கழகங்கள் போன்ற வெளி நிறுவனங்களோடு இணைந்து, மகளிர் மேம்பாட்டிற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

**5.2 குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பு – பொதுக்குழுவின் பொறுப்புகள்:**

- கூட்டமைப்பின் நிர்வாகிகளை தேர்வு செய்தல்

- செயற்குழு உறுப்பினர்களை தேர்வு செய்தல்.

- தொடர்ந்து மூன்று செயற்குழு கூட்டத்தில் கலந்துக் கொள்ளாத உறுப்பினர்களை மாற்றி அவர்களுக்குப் பதிலாக புதிய உறுப்பினர்களைத் தேர்வு செய்தல்.

- கூட்டமைப்பின் ஆண்டுத் திட்ட அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கைக்கு ஒப்புதல் அளித்தல்.

**5.3 குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பு – செயற்குழுவின் பொறுப்புகள்:**

- தொண்டு நிறுவனம் கோரும் குழு அமைப்பு தொகை, பராமரிப்பு தொகை மற்றும் பயிற்சி தொகைக்கான பட்டியலுக்கு சான்றளித்தல்.

- கூட்டமைப்பின் பொது சொத்துக்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை சுய உதவிக் குழுக்களின் நன்மைக்காக பராமரித்தல்.

- சுய உதவிக் குழுக்கள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட, மகளிர் திட்டத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுதல்.

- உரிய கால இடைவெளியில் உறுப்பினர் சுய உதவிக் குழுக்களை உள்தரம் பிரித்தல்.

- சுய உதவிக் குழு தர மதிப்பீட்டினை கண்காணித்தல்.

- வங்கிகள் மற்றும் பிற புகழ் பெற்ற நிதி நிறுவனங்களிடமிருந்து பெருங்கடன் பெற்று உறுப்பினர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்க நடவடிக்கை எடுத்தல். மேலும் இதற்காக வங்கிகள் மற்றும் பிற புகழ் பெற்ற நிதி நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளுதல்.

- சுய உதவிக் குழுக்கள் பெற்ற கடன்களை திருப்பி செலுத்துதலை கண்காணித்தல்.

- சுய உதவிக் குழுக்களுக்கான சமுதாய பயிற்றுநர்களின் செயல்பாடுகளை கண்காணித்தல்.

- நுண் காப்பீட்டுத் திட்டம் போன்றவை மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு பாதுகாப்பு அளித்தல்

**5.4 குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பு – நிர்வாகிகளின் பொறுப்புகள்:**

**(அ) தலைவர்:**

- பொதுக்குழு கூட்டம் மற்றும் செயற்குழு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்துதல்.

- கூட்டமைப்பின் பிரதிநிதியாக பல்வேறு கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.

**(ஆ) செயலாளர்:**

- கூட்டமைப்பின் செயற்குழு கூட்டத்தினை குறைந்தபட்சம் மாதம் ஒருமுறை கூட்டுதல்.
- தீர்மானப் பதிவேட்டினை பராமரித்தல்.
- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் கோரும் காலமுறை முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் விபரங்களை அளித்தல்.
- பொருளாளருடன் இணைந்து கூட்டமைப்பின் வங்கிக் கணக்குகளை பராமரித்தல். மற்றும் வங்கிக் காசோலைகளில் இணை கையொப்பம் இடுதல்.
- தலைவரோடு அல்லது தலைவர் இல்லாத பட்சத்தில் அவருக்கு பதிலாக கூட்டங்களில் கூட்டமைப்பின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளுதல்.
- கூட்டமைப்பின் சார்பாக அறிக்கைகள், ஒப்பந்தங்கள் மற்றும் ஆவணங்களில் அதிகாரபூர்வமாக கையொப்பம் இட்டு சான்றளித்தல்.
- பெருங்கடன் பெறுவதற்காக வங்கிகள் மற்றும் புகழ் பெற்ற பிற நிதி நிறுவனங்களடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளுதல்.

**(இ) இணைச் செயலாளர்:**

- செயலாளர் இல்லாத நேரங்களில் அவருக்கு பதிலாக அவரது பணிகளை மேற்கொள்ளுதல்.

**(ஈ) பொருளாளர்:**

- கணக்குப் புத்தகம் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்.
- கூட்டமைப்பு கையிருப்புப் தொகைகளை பராமரித்தல்.
- உரிய காலத்தில் கூட்டமைப்பின் கணக்குகளை தணிக்கை செய்ய ஏற்பாடுகள் செய்தல். மற்றும் தணிக்கை அறிக்கையினை பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு சமர்ப்பித்தல்.
- கூட்டமைப்பின் சார்பாக தேவைப்படும் காலத்தில் செயலாளருடன் இணைந்து அறிக்கைகள், ஒப்பந்தங்கள் மற்றும் ஆவணங்களில் அதிகாரப்பூர்வமாக கையொப்பமிட்டு சான்றளித்தல்.

- கூட்டமைப்பின் சார்பாக தேவைப்படும் காலத்தில் செயலாளருடன் இணைந்து பெருங்கடன் பெறுவதற்காக வங்கிகள் மற்றும் புகழ் பெற்ற பிற நிதி நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளுதல்.

**6. துணை குழுக்கள்:**

- கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களின் நலனுக்காக, குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பு பல்வேறு செயல் திட்டங்களை நிறைவேற்றும். இதற்காக கீழ்க்காணும் துணை குழுக்களை கூட்டமைப்பின் பொதுக்குழு அதன் உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கும்.

    - குழு அமைத்தல் மற்றும் வலிமைப்படுத்துதல் துணைக்குழு
    - கடன் இணைப்பு மற்றும் கடன் கண்காணிப்பு துணைக்குழு
    - வாழ்வாதார துணைக்குழு
    - சமூகப் பிரச்சனைகளுக்கான துணைக்குழு

- இத்துணை குழுக்களில் ஐந்து நபர்கள் உறுப்பினர்களாக இருப்பர். அவர்களில் இருவர் கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களிலிருந்தும், மற்ற மூன்று உறுப்பினர்கள் கூட்டமைப்பில் இணைந்துள்ள குழு உறுப்பினர்களிலிருந்தும் பொதுக் குழு தேர்ந்தெடுத்து நியமிக்கும்.

- இந்த ஐந்து உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 3 உறுப்பினர்கள், ஏழை மக்கள் பட்டியலில் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

**7. சமூக தணிக்கைக் குழு:**

- குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பு மற்றும் பகுதி அளவிலான மன்றங்களின் செயல்பாடுகளை கண்காணிக்கும் பொருட்டு மேலே குறிப்பிடப்பட்ட நான்கு துணைக் குழுக்களோடு ஐந்து நபர்களை கொண்ட சமூகத் தணிக்கைக் குழு ஒன்றையும் பொதுக்குழு நியமிக்கும்.

- பகுதி அளவிலான மன்றங்கள் மற்றும் குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழுவில் உறுப்பினர் அல்லது நிாவாகிகளாக இல்லாத பிற உறுப்பினர்களிலிருந்து ஐந்து நபர்கள் தேர்வு செய்யப்பட்டு இத்துணைக் குழு அமைக்கப்படும்.

- இக்குழுவின் ஐந்து உறுப்பினர்களில் மூன்று நபர்கள் ஏழை மக்கள் பட்டியலில் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

- இக்குழு தங்களுடைய முடிவு மற்றும் பரிந்துரைகளை கூட்டமைப்பின் பொதுக் குழுவிற்கு அவ்வப்போது தெரிவிக்கும்.

**8. வங்கிக் கணக்குகள்:**

- ஒவ்வொரு குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பும் நான்கு வங்கிக் கணக்குகள் வரை தொடங்கலாம். செயற்குழுவின் தீர்மானத்தின் பேரில் கூட்டமைப்பின் செயலாளர் மற்றும் பொருளாளர் இணைந்து இவ்வங்கி கணக்குகளை பராமரிப்பர்.

- பகுதி அளவிலான மன்றங்களில் நிதி செயல்பாடுகள் எதுவும் எதிர்பார்க்கப்படாததால் இம்மன்றங்களுக்கு வங்கிக் கணக்கு தொடங்கப்படமாட்டாது.

**9. குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பில் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள்:**

குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு கீழ்க்காணும் பதிவேடுகளை பராமரிக்கும்

1. வருகை மற்றும் தீர்மானப் பதிவேடு
2. உறுப்பினர் பதிவேடு
3. ரொக்கப் புத்தகம்
4. பொதுப் பேரேடு
5. கடன் பேரேடு
6. சொத்துப் பதிவேடு
7. பெருங்கடன் பதிவேடு

- குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பின் பொதுக்குழு, கூட்ட நடவடிக்கை மற்றும் வருகை பதிவேடுகளைப் பராமரிக்கும்.

- பகுதி அளவிலான மன்றம் இரண்டு பதிவேடுகள் மட்டும் அதாவது, கூட்ட நடவடிக்கை மற்றும் வருகைப் பதிவேடு மற்றும் கடன் கண்காணிப்பு பதிவேடுகளை பராமரிக்கும்.

**10. வரவு செலவு கணக்கு பராமரிப்பு:**

குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பு, வரவு செலவு கணக்குகளை பராமரிக்க கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழுவில் இருந்து 35 வயதிற்கு உட்பட்ட மகளிர் ஒருவரை முன்னுரிமை அளித்து கணக்கராக நியமிக்கலாம். இப்பணியின் விதிமுறைகளை பொதுக்குழு தீர்மானிக்கும்.

**11. குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பை பதிவு செய்தல்:**

புதியதாக அமைக்கப்படும் குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்தும், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975–ன் கீழ் பதிவு செய்யப்படும்.

**12. குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பிid தரப்படுத்துதல்:**

குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகளின் வளர்ச்சியினைத் தொடர்ந்து கண்காணிக்கும் விதமாக அவற்றை சில குறிப்பிட்ட காரணிகளின் அடிப்படையில் தரப்படுத்துவது அவசியமாகிறது. இது அவற்றின் செயல்பாடுகள், கடன் ஒழுக்கம் மற்றும் அவர்களுக்கு முன்னேற்றம் தேவைப்படும் இனங்களைக் கண்டறிய தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு உதவும். அரசு ஆணை எண். 465 ஊரக வளர்ச்சி மற்றும்

ஊராட்சித் துறை நாள் **23.07.2009** ல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் பதிவு செய்த நாளிலிருந்து **6** மாதங்கள் நிறைவுற்ற நிலையில் அவற்றை தரப்படுத்த உரிய வழிகாட்டி நெறிமுறைகளை அரசு வெளியிட்டுள்ளது. இத்தரப்படுத்தல் அனைவரின் பங்கேற்பு, உள்ளடக்கம், சிறந்த மற்றும் வெளிப்படையான நிர்வாகம், கடன் ஒழுக்கம் மற்றும் சமூக மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் போன்ற குறியீடுகளின் அடிப்படையில் செய்யப்படுகிறது. இந்த தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வெளி நிறுவனங்களிடமிருந்து கடன் இணைப்பு பெறவும் தகுதி பெறுகின்றன. எனவே ஊரகப் பகுதி மற்றும் நகர்புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளிடையே சமநிலை எய்திட அரசு ஆணை (நிலை) எண். **465** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் **23.07.2009**ல் வெளியிடப்பட்ட ஆணை, நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் பொருந்தும்.

**5.** மேலும், அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களுடன் கலந்தாலோசித்து வழிகாட்டு நெறிமுறைகளில் அவ்வப்போது நடைமுறையின் தேவைக்கு ஏற்றவாறு உரிய மாற்றம் செய்து கொள்ள அதிகாரம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை **–32.**
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை **–15.**
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், ()
அனைத்து திட்ட அலுவலர்கள், ()
(மகளிர் திட்டம்) ()
(மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை **– 18.**
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை **– 35.**
<u>நகல்:</u>–
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை **– 9.**
நிதி (ஊரக வளர்ச்சி)த்துறை, சென்னை **– 9.**
அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்
துறையின் தனிச் செயலர், சென்னை **– 9.**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (வரவு செலவு(ம) ஒருங்கிணைப்பு)துறை, சென்னை **– 9.**

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.